Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari 9444 288784
Dr Sathish Rajkumar 9445 401793
Dr Shanthi R 9884 650945
Dr Salina R 87780 87742
Dr Praveena E 9944 100443

மலர் 3 சென்னை | தினசரி | 4 பக்கம் வியாழன், அக்டோபர் 22, 2026 இதழ் 192

## பணியின் போது உயிரிழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.5.96 கோடி காப்பீட்டு தொகை - ஆணைகளை வழங்கிய முதல்வர்



சென்னை, 22 அக்டோபர் 2026: ஆண்டுதோறும் அக்டோபர் 21-ஆம் நாள் காவலர் வீர வணக்க நாளாக அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1959-ஆம் ஆண்டு லடாக் பகுதியில் சீனப்படைகள் நடத்திய திடீர் தாக்குதலில் 10 மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்) வீரர்கள் உயிர்த்தியாகம் செய்ததை நினைவுகூரும் வகையிலும், தமிழ்நாடு காவல்துறையில் பணி புரிந்து, பணியின்போது உயிரிழந்த காவலர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும் இந்தநாள் காவலர் வீரவணக்க நாளாக அனுசரிக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் இன்று சென்னை, காவல்துறை தலைமை அலுவலக வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், வீரமரணம் அடைந்த காவலர்களைக் கௌரவிக்கும் வகையில் காவலர் நினைவுச் சின்னம் முன்பாக மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவ்வளாகத்தில் மரக்கன்றை நட்டு வைத்தார்.

மேலும், தமிழ்நாடு காவல்துறையில் பணி புரிந்து பணியின்போது உயிரிழந்த 6 காவலர்களின் குடும்பங்கள் மற்றும் கோமா நிலையிலுள்ள ஒரு காவலர் என மொத்தம் 7 காவலர்களின் குடும்பங்களுக்கு, தமிழ்நாடு அரசின் சம்பளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் தொகையாக மொத்தம் 5 கோடியே 96 இலட்சம் ரூபாய்க்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த ஆண்டு தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த 6 காவலர்கள் உட்பட இந்தியாவில் 154 காவலர்கள் அதிகாரிகள் பணியின் போது வீரமரணம் அடைந்துள்ளனர். இவர்களது உயிர்த்தியாகம் போற்றுதலுக்குரியது.

இந்நிகழ்ச்சியில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஆ.கார்த்திக், காவல்துறை தலைமை இயக்குநர் திரு. மகேஷ் குமார் அகர்வால்., சென்னை பெருநகர காவல் ஆணையர் முனைவர் அ.அமல்ராஜ், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள், ஓய்வு பெற்ற காவல்துறை அலுவலர்கள் மற்றும் பணியின்போது உயிர் நீர்த்த காவல்துறையினரின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கடமைக்காக இன்னுயிரை தியாகம் செய்த காவல் துறையினர் அனைவருக்கும் வீர வணக்கங்கள் - முதல்வர் புகழஞ்சலி



சென்னை 22, அக்டோபர் 2026: ஆண்டுதோறும் அக்டோபர் 21-ஆம் தேதி காவலர் வீர வணக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. கடமைக்காகவும், நாட்டின் பாதுகாப்புக்காகவும் உயிர்நீத்த காவலர்களின் தியாகம் இந்நாளில் நினைவுகூரப்படுகிறது. அந்த வகையில் அக்டோபர் 21-ஆம் தேதியான இன்று காவலர் வீர வணக்க நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி முதல்வர் விஜய், தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த காவலர்களுக்கு புகழஞ்சலி செலுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிக்கையில் முதல்வர் விஜய் கூறியுள்ளதாவது; 1959-ஆம் ஆண்டு லடாக் எல்லைப் பகுதியில் தாய்நாட்டைக் காப்பதற்காக வீர மரணமடைந்த 10 மத்திய ரிசர்வ் காவல் படைக் காவலர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தியாகத்தைப் போற்றும் காவலர் வீரவணக்க நாளில், நாட்டில் அமைதியையும், சட்டம்-ஒழுங்கையும் நிலைநாட்டும் உயரிய கடமையில் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த காவல் துறையினர் அனைவருக்கும் வீர வணக்கங்கள் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இயற்கைப் பேரிடர்கள், விபத்துகள், குற்றச் சம்பவங்கள், பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் சூழல்கள் என பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, துணிவுடனும், விஸீப்புடனும் பணியாற்றும் காவலர்களின் அர்ப்பணிப்பு போற்றுதலுக்குரியது. கடமையின் பாதையில் இன்னுயிர் நீத்து, அமரர்களான வீரத் தியாகிகளுக்குத் தலை வணங்கி அஞ்சலி செலுத்துவதோடு, காலநேரம் கருதாமல், அயராது உழைத்து, நாட்டின் அரணாகத் திகழும் காவல் துறையினரின் உன்னதப் பணிகளைப் போற்றிடுவோம் என்று முதல்வர் விஜய் புகழாரம் சூட்டியுள்ளார்.




## ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா: மத்திய கிழக்கில் ஸ்திரத்தன்மை அவசியம்; 10 மில்லியன் இந்தியர்களின் பாதுகாப்பு மிக முக்கிய முன்னுரிமை



சென்னை 22, அக்டோபர் 2026: மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான சூழல் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் (யூஎன்எஸ்சி) நடைபெற்ற பொது விவாதத்தின் போது, இந்தியா தனது உறுதியான மற்றும் தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்தது. அப்பகுதியில் தொடர்ந்து நிலவும் பதற்றங்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் பி. ஹரிஷ், மத்திய கிழக்கு பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதில் இந்தியாவுக்கு நேரடியான மற்றும் முக்கியமான நலன்கள் உள்ளன என்பதை வலியுறுத்தினார்.

நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்திய நிரந்தர தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (ஜிசிசி) நாடுகளில் சுமார் 10 மில்லியன் இந்தியர்கள் வசித்து வருவதாக தூதுவர் ஹரிஷ் சுட்டிக்காட்டினார். எனவே, மத்திய கிழக்கில் ஏற்படும் எந்தவொரு அமைதியின்மையும் அல்லது மோதலும் அங்கு வசிக்கும் இந்தியர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் நேரடியாகப் பாதிக்கின்றன.

இந்த சர்வதேச அரங்கில் பேசிய இந்தியா, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடிக்கவும், மோதல்களையும் பதற்றங்களையும் உடனடியாகக் குறைக்கவும், நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வுகளைக் காண மீண்டும் பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர வழிகளுக்குத் திரும்பவும் வலுவாக வலியுறுத்தியது.

தனது ராஜதந்திர அறிக்கையில், "உண்மையான அமைதி என்பது போர் அல்லது தாக்குதல்கள் இல்லாத நிலை மட்டுமல்ல, நீடித்த ஸ்திரத்தன்மை கொண்ட பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே ஆகும்" என்ற பரந்த பார்வையை இந்தியா முன் வைத்தது. "பாதுகாப்பான, நிலையான மற்றும் வளமான மத்திய கிழக்கை உருவாக்குவதில் இந்தியா முழுமையாக அர்ப்பணிப்புடன் உள்ளது" என்று தூதுவர் மீண்டும் உறுதிப்படுத்தினார். மத்திய கிழக்கு பிராந்தியம், தனது குடிமக்களின் பாதுகாப்பு மட்டுமின்றி, இந்தியாவின் உலகளாவிய பொருளாதார மற்றும் வர்த்தக நலன்களுக்கும் மிக முக்கியமான பகுதி என்பதை இந்தியாவின் இந்த நிலைப்பாடு தெளிவாக உணர்த்துகிறது.

வளைகுடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் தனது குடிமக்களின் நலன்களையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் இந்திய அரசு தொடர்ந்து உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. நெருக்கடியான காலங்களில் மேற்கொள்ளப்பட்ட 'ஆபரேஷன் அஜய்' போன்ற பிரத்யேக வெளியேற்ற நடவடிக்கைகள் மற்றும் இந்தியத் தூதரகங்கள் மூலம் 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையங்கள் போன்றவை, தனது குடிமக்களின் நலனில் இந்திய அரசு கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகின்றன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் 10 மில்லியன் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த விவகாரத்தை எழுப்பியதன் மூலம், இந்தியக் குடிமக்களின் பாதுகாப்பும் நலனுமே நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் மிக உயர்ந்த முன்னுரிமை என்பதை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

## தமிழகத்தில் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு பிறகு ஒரே நேரத்தில் ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்த திட்டம்

சென்னை 22, அக்டோபர் 2026: தமிழகத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2027 மார்ச் மாதத்துக்குப் பிறகு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை, புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், நகர்ப்புற அமைப்புகளுடன் கிராம ஊராட்சிகளை இணைத்தல் மற்றும் இடஒதுக்கீடு தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் முடிவடைந்த பின்னரே உள்ளாட்சி தேர்தலை நடத்த முடியும் என்பதால், தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்பு நடைபெற வாய்ப்பில்லை என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் கடந்த 19ம் தேதியுடன் முடிவடைந்தது. இதையடுத்து, இந்த மாவட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தை கவனிக்க சிறப்பு அலுவலர்களை அரசு நியமித்துள்ளது. ஏற்கெனவே 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் முடிவடைந்த நிலையில், அங்கு நியமிக்கப்பட்ட சிறப்பு அலுவலர்களின் பதவிக் காலம் 2027 ஏப்ரல் 19ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகள், டிசம்பர் மாதம் வரை நடைபெறவுள்ள இடைத்தேர்தல்கள் மற்றும் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் ஆகியவையும் தேர்தல் தாமதத்துக்குக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. தமிழக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஐந்தாண்டு பதவிக் காலம் 2027 மார்ச் மாதத்தில் முடிவடைய உள்ளது.

எனவே, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதுவரை கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் நிர்வாகத்தை சிறப்பு அலுவலர்கள் தொடர்ந்து கவனிப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
RNI No.: TNTAM34846
உள்ளது உள்ளபடி

வியாழன்,
அக்டோபர் 22, 2026

# இந்தியாவில் புதிய ஆடி க்யூ3 அறிமுகம்: தொடக்க விலை ரூ.51.99 லட்சம்

மதுரை 22, அக்டோபர் 2026: ஜெர்மனியைச் சேர்ந்த சொகுசு கார் தயாரிப்பு நிறுவனமான ஆடி, தனது புதிய க்யூ3 (ஆடி க்யூ3) காரை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இக்காரின் அறிமுக விலை ரூ.51,99,000 (காட்சியக விலையைத் தவிர). மகாராஷ்டிர மாநிலம் சத்ரபதி சம்பாஜிநகரில் உள்ள எஸ்ஏவிடபிள்யூஐபிஎல் ஆலையில் இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் இந்தச் சிறிய ரக சொகுசுக் கார், சிறந்த செயல்திறன், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் கூடுதல் வசதிகளை ஒருங்கே கொண்டுள்ளது.

புதிய ஆடி க்யூ3 கார் 150 கிலோவாட் திறனை வழங்குவதுடன், நான்கு சக்கரங்களுக்கும் ஒரே நேரத்தில் ஆற்றலைப் பகிர்ந்தளிக்கும் குவாட்ரோ இயக்கத் தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது. இதன் உட்புறத்தில் அகலமான மின்னணுத் திரை அமைப்பு, ஓட்டுநரின் பார்வைக்கு நேரடியாகத் தகவல்களைக் காட்டும் தலைக்கு முன்னால் அமைந்த காட்சித்திரை மற்றும் சோனோஸ் உயர்தர ஒலியமைப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன.




இந்தக் காரில் நுண் எல்இடி தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜிட்டல் மேட்ரிக்ஸ் எல்இடி முகப்பு விளக்குகள், நான்கு வகைகளில் தேர்வு செய்யக்கூடிய பகல்நேர ஓட்ட விளக்குகள் மற்றும் மூன்று விதமான மாறும் ஒளி அமைப்புகள் உள்ளன. பின்புறத்தில் ஒளிரும் ஆடி சின்னங்கள் தனித்துவமான தோற்றத்தை அளிக்கின்றன.

ஓட்டுநரை மையமாகக் கொண்ட மின்னணு இடைமுகம், வாகனத் தகவல்கள், கட்டுப்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஒருங்கிணைக்கிறது. கியர் மாற்றம், விளக்குகள், கண்ணாடித் துடைப்பான்கள் உள்ளிட்டவற்றை எளிதாகக் கட்டுப்படுத்தும் புதிய சுவிட்ச் அமைப்பும் இதில் இடம்பெற்றுள்ளது.

அறிமுகம் குறித்து ஆடி ஏஜி நிறுவனத்தின் வெளிநாட்டு விற்பனைப் பிரிவின் மூத்த இயக்குநர் விக்டோரியா காஃப் மேன்-ரீகர் கூறுகையில், இந்தியாவில் வளர்ந்து வரும் சொகுசுக் கார் சந்தையும், வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் எதிர்பார்ப்புகளும் இந்நாட்டின் முக்கியத்துவத்தை உயர்த்துவதாகத் தெரிவித்தார்.

எஸ்ஏவிடபிள்யூஐபிஎல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான பியூஷ் அரோரா, இந்தியாவில் இந்தக் கார் தயாரிக்கப்படுவது நாட்டின் உற்பத்தி மற்றும் பொறியியல் திறன்களை எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிட்டார்.

ஆடி இந்தியாவின் பிராண்ட் இயக்குநர் பல்பீர் சிங் தில்லான் கூறுகையில், புதிய க்யூ3 கார் செயல்திறன், அன்றாடப் பயன்பாட்டுக்கான வசதி, நவீனத் தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட சொகுசு அம்சங்களை ஒருங்கிணைப்பதாகத் தெரிவித்தார்.

நவீன வடிவமைப்பு, மேம்பட்ட மின்னணுத் தொழில்நுட்பம் மற்றும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படும் சிறப்பு ஆகியவற்றின் மூலம், இந்திய சொகுசுக் கார் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில் ஆடி நிறுவனம் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

# இந்தியா-நியூசிலாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அமல்

சென்னை 22, அக்டோபர் 2026: இந்தியா-நியூசிலாந்து இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மொரிஷீயஸ், ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்க கூட்டமைப்பு, இங்கிலாந்து, ஓமன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் கூற்கனவே இந்தியா சுத்நதிர வர்த்த ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்தியா-நியூசிலாந்து இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தமானது கடந்த 2010ம் ஆண்டு தொடங்கப்பட்டு 2015ம் ஆண்டில் முடங்கியது.



பின்னர் 2025ம் ஆண்டு மீண்டும் தொடங்கப்பட்டு கடந்த ஏப்ரல் 27ம் தேதி இந்தியா- நியூசிலாந்து இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனைத் தொடர்ந்து நேற்று முதல் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. ஞாடந்த ஐந்து ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்த ஏழாவது வர்த்தக ஒப்பந்தம் இதுவாகும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜவுளி மற்றும் தோல் பொருட்கள் போன்ற அதிக மனித வளத் தேவை கொண்ட துறைகள் உட்பட பல்வேறு இந்தியப் பொருட்கள் எந்தவித வரியுமின்றி நியூசிலாந்து சந்தையை சென்றடைவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# கியா இந்தியா - வாகனத் தொழில்துறை திறன் மேம்பாட்டு மையம் மும்பையில் தொடக்கம்

சென்னை 22, அக்டோபர் 2026: கியா இந்தியா நிறுவனம், வாகனத் தொழில்துறை திறன் மேம்பாட்டுக் குழுவுடன் (ஏஎஸ்டிசி) இணைந்து, மும்பை குர்லாவில் உள்ள டான் போஸ்கோ தொழிற்பயிற்சி நிலையத்தில் (ஐடிஐ) வாகனத் தொழில்துறைக்கான திறன் மேம்பாட்டு மையத்தைத் தொடங்கியுள்ளது.

கியா இந்தியாவின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள இந்த முயற்சியின் முதல் மையமாக இது அமைந்துள்ளது. ஃபரிதாபாத், மும்பை, பெங்களூரு, கொல்கத்தா ஆகிய நான்கு நகரங்களில் அமைக்கப்படவுள்ள மையங்கள் வாயிலாக 360 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இளைஞர்களின் வேலைவாய்ப்புத் தகுதியை மேம்படுத்துவதுடன், வாகனத் தொழில்துறைக்குத் தேவையான திறன்மிக்க பணியாளர்களை உருவாக்குவதும் நோக்கமாகும்.



மும்பை மையத்தில் 150 பேருக்கு நான்கு சக்கர வாகனப் பராமரிப்புத் தொழில்நுட்ப வல்லுநர், வாகனப் பராமரிப்பு ஆலோசகர், வாகன விற்பனைப் பணியாளர் ஆகிய மூன்று பிரிவுகளில் பயிற்சி வழங்கப்படும். ஃபரிதாபாத்தில் 150 பேருக்கும், பெங்களூரு மற்றும் கொல்கத்தாவில் தலா 30 பேருக்கும் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவதுடன், வகுப்பறைக் கற்றல், செய்முறைப் பயிற்சி, பணியிட அனுபவம் ஆகியவையும் இடம்பெறும்.

கியா இந்தியாவின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் மூத்த துணைத் தலைவர் திரு. அதுல் சூட் கூறுகையில், இத்திட்டம் இளைஞர்களுக்குத் தொழில்துறைக்குத் தேவையான திறன்களை வழங்கி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் எதிர்காலத்திற்குத் தயாரான வாகனத் துறையை உருவாக்குவதற்கும் உதவும் என்றார்.

வாகனத் தொழில்துறை திறன் மேம்பாட்டுக் குழுவின் தலைவர் திரு. வின்கேஷ் குலாட்டி, தொழில்துறையில் நிலவும் திறன் இடைவெளியைக் குறைப்பதில் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இந்திய வாகன விற்பனையாளர்கள் கூட்டமைப்பின் (எஃப்ஏடிஏ) துணைத் தலைவர் திரு. அமர் ஷேத், வாகனப் பராமரிப்பு, வாடிக்கையாளர் ஆலோசனை, விற்பனை ஆகிய பிரிவுகளில் திறன்மிக்க பணியாளர்களை உருவாக்க இம்முயற்சி உதவும் என்று தெரிவித்தார்.

இளைஞர்களின் முன்னேற்றம், திறன் மேம்பாடு, சமூகத்தின் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றுக்கான தனது உறுதிப்பாட்டை இத்திட்டத்தின் மூலம் கியா இந்தியா மேலும் வலுப்படுத்துகிறது.

# 2027 நிதியாண்டின் 2-வது காலாண்டில் முந்தைய ஆண்டை விட 67% உயர்வுடன் 545 கோடி நிகர லாபத்தை எட்டியிருக்கும் பிரமல் ஃபைனான்ஸ்

சென்னை 22, அக்டோபர் 2026: வங்கி சாரா நிதித் துறையில் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் (என்பிஎஃப்சி) ஒன்றான பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட், செப்டம்பர் 30, 2026-உடன் முடிவடைந்த இரண்டாவது காலாண்டில் ரூ.545 கோடியை நிகர லாபமாகப் (பிஏடி) பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட இது 67% அதிகமாகும். இதன் மூலம், 2027 நிதியாண்டின் முதல் அரையாண்டிற்கான நிகர லாபம் ரூ.1,006 கோடியாக உயர்ந்துள்ளது; இதுவும் முந்தைய ஆண்டை விட 67% அதிகரிப்பாகும்.

நிறுவனம் நிர்வகிக்கும் சொத்துக்களின் மதிப்பு (ஏயூஎம்) முந்தைய ஆண்டைவிட 24% அதிகரித்து ரூ.1,13,112 கோடியை எட்டியுள்ளது. குறிப்பாக நிறுத்தப்பட்ட பழைய வணிகங்களைத் தவிர்த்து, நிறுவனத்தின் வளர்ச்சி சார்ந்த சொத்துக்களின் (க்ரோத் ஏயூஎம்) மதிப்பு 30% அதிகரித்ததே இதற்கு முக்கியக் காரணமாகும். வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான நிதி தேவைப்பாடு மற்றும் நிலையான வணிக வளர்ச்சியின் விளைவாக, சில்லறை கடன்கள் வழங்கல் ரூ.14,646 கோடியாக அதிகரித்து, 34% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. நிறுவனத்தின் நாடு தழுவிய கட்டமைப்பு 25 மாநிலங்களில் உள்ள 621 நகரங்களில் 838 கிளைகளாக மேலும் விரிவடைந்துள்ளது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் 26% உயர்வுடன் 65 லட்சத்தை எட்டி, இந்தியா முழுவதும் நிறுவனத்தின் இருப்பை மேலும் வலுவாக்கியிருக்கிறது.

நிறுவனத்தின் எதிர்கால சில்லறை வர்த்தக பிரிவினால் முன்னெடுக்கப்படும் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க, மூலதன அடித்தளத்தை வலுப்படுத்த ரூ.3,850 கோடியை ஈக்விட்டி மூலதனமாக இந்நிறுவனம் வெற்றிகரமாகத் திரட்டியுள்ளது. இதில் தகுதி வாய்ந்த நிறுவன முதலீட்டாளர்கள் (க்யூஐபி) மூலம் ரூ.2,100 கோடியும், புரமோட்டர் குழுமத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் ரூ.1,750 கோடி மதிப்பிலான வாரண்டுகளை ஒதுக்கீடு செய்ததும் அடங்கும். பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) முன்னாள் தலைவரான திரு. தினேஷ் குமார் காரா அவர்களை ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒரு சுயாதீன இயக்குநராக நியமனம் செய்திருப்பதையும் நிறுவனம் இன்று அறிவித்துள்ளது.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகால சிறப்பான பணி அனுபவம் கொண்ட அவரது நிபுணத்துவம், தீர்க்கமான முடிவெடுக்கும் திறன் மற்றும் ஆழமான புரிதலின் அடிப்படையிலான ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் நிறுவனத்திற்குப் பெரும் மதிப்பைச் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## Summit ஆக்டிவ் அசெட் அலோகேட்டர் லாங்-ஷார்ட் ஃபண்டை அறிமுகப்படுத்துகிறது Summit எஸ்ஐஎஃப்! என்எஃப்ஓ தொடக்கம்: 12 அக்டோபர் 2026; முடிவு: 26 அக்டோபர் 2026

சென்னை 22, அக்டோபர் 2026: Summit எஸ்ஐஎஃப் இன்று Summit ஆக்டிவ் அசெட் அலோகேட்டர் லாங்-ஷார்ட் ஃபண்ட் திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இது, பங்குச் சந்தை, கடன் பத்திரங்கள், பங்கு மற்றும் கடன் சார்ந்த டெரிவேட்டிவ்கள், InVITs மற்றும் கமாடிட்டி டெரிவேட்டிவ்கள் ஆகியவற்றில் டைனமிக்காக முதலீடு செய்யும் இடைவெளிக்கால முதலீட்டு உத்தி, இதில் அனுமதிக்கப்பட்ட நிதியியல் கருவிகளில் டெரிவேட்டிவ்கள் மூலம் குறிப்பிட்ட அளவு ஷார்ட் எக்ஸ்போஷரும் அடங்கும்.

பாரம்பரியமாக, ஆர்பிட்ரேஜ் உத்திகள் பிரதானமாக கேஷ்-ஃபியூச்சர்ஸ் விரிசல்களிலிருந்து (ஸ்ப்ரெட்ஸ்) கிடைக்கும் வாய்ப்புகளையே சார்ந்திருந்தன. இருப்பினும், நிதிச் சந்தைகள் வளர்ச்சியடைந்துள்ள நிலையில், பல்வேறு வகையான நிதியியல் கருவிகள், சொத்துப் பிரிவுகள் மற்றும் சந்தைச் சூழல்கள் முழுவதும் பரவலான வாய்ப்புகள் உருவாகக்கூடும்.

மல்டி-ஆர்பிட்ரேஜ் அணுகுமுறையின் தத்துவத்தைச் சுற்றி உருவாக்கப்பட்ட Summit ஆக்டிவ் அசெட் அலோகேட்டர் லாங்-ஷார்ட் ஃபண்ட், ஒரே போர்ட்ஃபோலியோவிற்குள் பல ஆர்பிட்ரேஜ் வாய்ப்புகளை ஒன்றிணைக்க முயல்கிறது. அடிப்படை ஆர்பிட்ரேஜ் இந்த உத்தியின் அடித்தளமாக அமைந்தாலும், செயற்கை ஆர்பிட்ரேஜ், இண்டெக்ஸ் ஆர்பிட்ரேஜ், கமாடிட்டி ஆர்பிட்ரேஜ் மற்றும் சிறப்புச் சூழல்கள் (ஸ்பெஷல் சிட்டுவேஷன்ஸ்) ஆகியவற்றில் உள்ள கூடுதல் ஆர்பிட்ரேஜ் வாய்ப்புகள் இதன் முதலீட்டு வரம்பை விரிவுபடுத்த முயல்கின்றன.

சந்தையின் போக்கால் நேரடியாகப் பாதிக்கப்படும் வாய்ப்பைக் குறைவாக வைத்திருக்கும் அதே வேளையில், கிடைக்கக்கூடிய விரிசல்களைக் (ஸ்ப்ரெட்ஸ்) கைப்பற்றும் வகையில் இந்த உத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. சந்தைக் கணிப்புகளை விட ஆர்பிட்ரேஜ் வாய்ப்புகளில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம், நடுத்தர கால அடிப்படையில் முதலீட்டைப் பயன்படுத்துவதற்கான ஒரு வித்தியாசமான அணுகுமுறையை இது முதலீட்டாளர்களுக்கு வழங்க முயல்கிறது. இந்த உத்தியை திரு. தீபக் குப்தா நிர்வகிப்பார், மேலும் இது 40% Nifty 500 TRI + 40% CRISIL Short Term Bond Fund Index + 20% iCOM DEX Composite Index ஆகியவற்றை ஒப்பீட்டு அளவீடாகக் (பெஞ்ச்மார்க்) கொண்டு செயல்படும்.

Summit எஸ்ஐஎஃப் நிறுவனத்தின் ஃபண்ட் மேனேஜர் திரு. தீபக் குப்தா அவர்கள் இந்த அறிமுக நிகழ்ச்சியில் பேசுகையில், "ஆர்பிட்ரேஜ் என்பது பெரும்பாலும் கேஷ்-ஃபியூச்சர்ஸ் விரிசல்கள் மூலமாகவே பார்க்கப்படுகிறது. இருப்பினும், விலை நிர்ணய வாய்ப்புகள் பல்வேறு சந்தைகள், நிதியியல் கருவிகள் மற்றும் சூழல்கள் முழுவதும் உருவாகக்கூடும். வழக்கமான ஆர்பிட்ரேஜ் முறைகளுடன் சேர்த்து, சிந்தடிக் ஃபியூச்சர்ஸ், குறியீடுகள், கமாடிட்டிகள் மற்றும் சிறப்புச் சூழல்கள் ஆகியவற்றின் மூலம் அத்தகைய ஆர்பிட்ரேஜ் வாய்ப்புகளை விரிவாக ஆராய்வதற்கான ஒரு பரந்த தளத்தை எஸ்ஐஎஃப் கட்டமைப்பு நமக்கு வழங்குகிறது.

## வங்காளத்தின் பூஜோ கொண்டாட்டங்களுக்கு ஆமந்த்ரோன் உணர்வைக் கொண்டு வரும் மாஸா

சென்னை 22, அக்டோபர் 2026: இந்த பூஜோவுக்கு, இந்தியாவின் உள்நாட்டு புகழ்பெற்ற மாம்பழ பானமான மாஸா, வங்காளத்தின் பாரம்பரியமான ஆமந்த்ரோன், அதாவது அழைப்பை, மாஸா ஆமந்த்ரோன் மூலம் உயிர்ப்பிக்கிறது. மங்களகரமான நிகழ்வுகளின் போது வங்காளிகளின் மிட்டு வாசல்களை அலங்கரிக்கும் பாரம்பரிய மாயிலை தோரணத்திலிருந்து உத்வேகம் பெற்று, இந்த முன்னெடுப்பு பூஜோ கொண்டாட்டங்களின் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு பண்டிகை கால அமைப்பின் மூலம் தாயகம் திரும்புதல் மற்றும் விருந்தோம்பல் உணர்வைக் கொண்டாடுகிறது.

வங்காள வீடுகளில், மாஇலைகளால் செய்யப்படும் தோரணமான ஆம்ரா பல்லவ், மங்களகரமான தொடக்கங்களையும், வருபவர்களுக்கு அன்பான வரவேற்பையும் குறிக்கிறது. இந்த பழக்கமான வீட்டு சடங்கிலிருந்து உத்வேகம் பெற்று, மாஸா பாரம்பரிய தோரணத்தை ஒரு பண்டிகை நுழைவாயிலாக மீண்டும் கற்பனை செய்து, பிராண்டின் மாம்பழ அடையாளத்தை வங்காளத்தில் ஆழமாக வேரூன்றிய ஒரு கலாச்சார நடைமுறையுடன் இணைக்கிறது.

மாஸா ஆமந்த்ரோன் -இன் ஒரு பகுதியாக, பார்வையாளர்கள் அக்டோபர் 14 முதல் 20, 2026 வரை தம் தம் தருண் தல்-இல் இந்த அமைப்பை அனுபவிக்கலாம். இந்த அனுபவம் பாரம்பரிய மாயிலை தோரணத்தை பொது கொண்டாட்டத்திற்கு கொண்டு வருகிறது, இது பார்வையாளர்களுக்கு நன்கு அறியப்பட்ட வங்காள வழக்கத்துடன் ஒரு புதிய அமைப்பில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.




இந்த முன்னெடுப்பு பண்டிகை அலங்காரத்திற்கு ஒரு சிந்தனைமிக்க அணுகுமுறையையும் கொண்டுவருகிறது, இதில் மாஸா அதன் தோரணங்களுக்கு மட்கக்கூடிய பொருளைப் பயன்படுத்துகிறது. இது இந்த பண்டிகை அமைப்பு, கொண்டாட்டங்களுக்கு அப்பால் நிலைத்தன்மையைக் கருத்தில் கொண்டு வங்காளத்தின் மரபுகளைக் கொண்டாட அனுமதிக்கிறது.

கொக்கக்-கோலா இந்தியா மற்றும் தென் மேற்கு ஆசியாவின் நியூட்ரிஷன் பிரிவின் மார்க்கெட்டிங் சீனியர் டைரக்டர் சுனனிகா சிங் அவர்கள், "பூஜோ தாயகம் திரும்புதல், சமூகம் மற்றும் வங்காளம் அனைவரையும் வரவேற்கும் அரவணைப்பு ஆகியவற்றின் சாரத்தை கொண்டு வருகிறது. மாஇலை தோரணம் இந்த உணர்வின் அழகான வெளிப்பாடாகும், இது மங்களகரமான தொடக்கங்களைக் குறிக்கிறது மற்றும் வருபவர்கள் அனைவருக்கும் அழைப்பை விடுக்கிறது. மாஸா ஆமந்த்ரோன் மூலம், இந்த பழக்கமான மரபை பூஜோவின் பெரிய கேன்வாஸில் கொண்டுவர நாங்கள் விரும்பினோம். கொண்டாட்டங்களுக்கு அப்பால் இந்த அமைப்பின் ஆயுளைக் கருத்தில் கொண்டு, நிலைத்தன்மை கொண்ட பொருள் கண்டுபிடிப்புகள் எவ்வாறு பண்டிகை அனுபவத்தின் ஒரு பகுதியாக இருக்க முடியும் என்பதையும் நாங்கள் ஆராய்ந்துள்ளோம்" என்று கூறினார்.

## ரூ. 409 கோடி முன்னுரிமை ஒதுக்கீடு மூலம் மூலதன உட்செலுத்தலுக்கு வாரியம் ஒப்புதல்!

சென்னை 22, அக்டோபர் 2026: உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்கின் வணிகச் செயல்பாடுகளின் சுருக்கம் - க்யூ2எஃப்ஒய்27:

வைப்புத்தொகைகள்

வைப்புத்தொகைகள் ரூ.50,000 கோடி என்ற மைல்கல்லைக் கடந்து, 29.2% ஆண்டு வளர்ச்சியுடன் (ஒய்ஓஒய்) / 5.2% காலாண்டு வளர்ச்சியுடன் (க்யூஓக்யூ) ரூ.50,643 கோடியை எட்டியுள்ளது

காசா வைப்புத்தொகை 22.2% (ஒய்ஓஒய்) உயர்ந்து ரூ.13,176 கோடியாக உள்ளது; காசா விகிதம் 26.0% ஆக உள்ளது

க்யூ2எஃப்ஒய்27-க்கான நிதிக்கான செலவு (சிஓஎஃப்) 6.9% ஆக உள்ளது, இது ஆண்டு அடிப்படையில் 0.4% குறைவு

இக்காலாண்டில் வங்கி வாடிக்கையாளர்களுக்காக 'ஏஎஸ்பிஏ' வசதியை அறிமுகப்படுத்தியது

சொத்துக்கள் (அஸெட்ஸ்)

மொத்த கடன் புத்தகம் (கிராஸ் லோன் புக்) 32.1% (ஒய்ஓஒய்) / 6.5% (க்யூஓக்யூ) உயர்ந்து ரூ.45,699* கோடியை எட்டியுள்ளது

மிக அதிகபட்ச காலாண்டு கடன் விநியோகமாக 32.3% (ஒய்ஓஒய்) வளர்ச்சியுடன் ரூ.10,495 கோடியை எட்டியுள்ளது

பாதுகாக்கப்பட்ட கடன் புத்தகம் (செக்யூர்ட் புக்) ரூ.23,803 கோடியாக உயர்ந்து, பாதுகாக்கப்பட்ட கடன்களின் பங்கை 52.1% ஆக உயர்த்தியுள்ளது

மலிவு விலை வீட்டு வசதி (அஃபோர்டபிள் ஹவுசிங்) கடன் ரூ.10,000 கோடி வரம்பைக் கடந்து, 31.4% (ஒய்ஓஒய்) வளர்ச்சியுடன் ரூ.10,056 கோடியை எட்டியுள்ளது

வசூல் மற்றும் சொத்து தரம் (கலெக்ஷன் அண்ட் அஸெட் குவாலிட்டி)

ஆபத்தில் உள்ள போர்ட்ஃபோலியோ (போர்ட்ஃபோலியோ அட் ரிஸ்க்*) செப்டம்பர் '25-ல் இருந்த 4.44%-ல் இருந்து, செப்டம்பர் '26-ல் 3.57% ஆகக் குறைந்துள்ளது (ஆண்டு அடிப்படையில் 88 பிபிஎஸ் குறைவு)

ஜிஎன்பிஏ / என்என்பிஏ ஆண்டு அடிப்படையில் 2.45%/0.67%-ல் இருந்து முறையே 2.10%/0.31% ஆக மேம்பட்டுள்ளது

ஒதுக்கீட்டு பாதுகாப்பு விகிதம் (புரொவிஷன் கவரேஜ் ரேஷியோ) ஆண்டு அடிப்படையில் 12% அதிகரித்து 85% ஆக உயர்ந்துள்ளது

குழு மற்றும் தனிநபர் கடன்களுக்கான 'பக்கெட்-எக்ஸ்' வசூல் திறன் க்யூ2எஃப்ஒய்27-ல் 99.71% ஆக மேம்பட்டுள்ளது

நிதி நிலை (பைனான்சியல்ஸ்)

மிக அதிகபட்ச நிகர லாபமாக (பிஏடி) 199.9% (ஒய்ஓஒய்) மற்றும் 15.3% (க்யூஓக்யூ) உயர்வுடன் ரூ.365 கோடி ஈட்டப்பட்டுள்ளது

வரலாற்றுச் சாதனையாக காலாண்டு நிகர வட்டி வருவாய் (என்ஐஐ) 35% (ஒய்ஓஒய்) உயர்ந்து ரூ.1,244 கோடியை எட்டியுள்ளது; நிகர வட்டி வரம்பு (என்ஐஎம்) ஆண்டு அடிப்படையில் 55 பிபிஎஸ் உயர்ந்து 8.4% ஆக சீராக உள்ளது

செலவு-வருவாய் விகிதம் (காஸ்ட் டு இன்கம்) 62% ஆகக் குறைந்து, ஆண்டு அடிப்படையில் 4.9% மற்றும் காலாண்டு அடிப்படையில் 0.5% மேம்பட்டுள்ளது

சொத்து மீதான வருவாய் (ஆர்ஓஏ) 1.4% (ஒய்ஓஒய்) உயர்ந்து 2.4% ஆகவும், பங்கு மூலதன மீதான வருவாய் (ஆர்ஓஇ) 12% (ஒய்ஓஒய்) உயர்ந்து 19.7% ஆகவும் உள்ளது

மூலதனம் மற்றும் பணப்புழக்கம் (கேபிட்டல் அண்ட் லிக்யூடிட்டி)

மூலதனப் போதிய க்ளாஸ் விகிதம் (Capital adequacy ratio) 20.69% ஆக உள்ளது

க்யூ2எஃப்ஒய்27-க்கான சராசரி தினசரி எல்சிஆர் 131% ஆக வலுவான பணப்புழக்கத்தைக் கொண்டுள்ளது.

## திருவொற்றியூர் பகுதியில் துணிக்கடை உரிமையாளரிடம் கத்தியை காட்டி மிரட்டி துணிகளை எடுத்துச் சென்ற வழக்கில் மேலும் ஒரு சரித்திர பதிவேடு குற்றவாளி கைது. ரூ.3,000/-மதிப்புள்ள துணிகள் மீட்பு

சென்னை 22, அக்டோபர் 2026: சென்னை, திருவொற்றியூர், பாரதி நகர், டி.எச்.ரோடு பகுதியில் குடும்பத்துடன் வசித்து வரும் வசந்தராஜ், வ/31 என்பவர் திருவொற்றியூர், இரட்டைமலை சீனிவாசன் முதல் தெருவில் துணிக்கடை நடத்தி வருவதாகவும், வசந்தராஜ் கடந்த 17.10.2026 அன்று மதியம் மேற்படி கடையிலிருந்தபோது, அங்கு வந்த 4 நபர்கள் துணி எடுப்பது போல் நடித்து, கடையில் உள்ள சிசிடிவி கேமராக்களை அணைத்து விட்டு, கடையிலிருந்து துணிகளை எடுத்துக் கொண்டு, வசந்தராஜை கத்தியை காட்டி மிரட்டியும், கையால் தாக்கியும், கடையின் வெளியில் ஏற்கனவே 2 இருசக்கர வாகனங்களுடன் தயாராக நின்றிருந்த நபர்களுடன் ஏறி தப்பிச்சென்றதாகவும், மேற்படி கொள்ளையில் ஈடுபட்ட நபர்களை கண்டுபிடித்து, தனது துணிகளை மீட்டு தரும்படியும் வசந்தராஜ் என்பவர் ஹெச்-8 திருவொற்றியூர் காவல் நிலையம் குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, 1.ஜெயகுமார், வ/23, 2.ரமேஷ்குமார், வ/29, 3.சஞ்சய்குமார், வ/23, 4.விஜய், வ/25, 5.யோகேஷ், வ/20, ஆகிய 5 நபர்கள் கடந்த 18.10.2026 அன்று கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து ரூ.9,000/- மதிப்புள்ள துணிகள் மீட்கப்பட்டு, குற்றச்செயலுக்கு பயன்படுத்திய 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவந்தனர்.

ஹெச்-8 திருவொற்றியூர் காவல் நிலையம் குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் மேற்படி வழக்கில் தலைமறைவாக இருந்த மற்றொரு எதிரியை பல்வேறு இடங்களில் தேடி, தீவிர விசாரணை மேற்கொண்டு தலைமறைவு எதிரி 6.அருண்குமார், வ/26, எஸ்விஎம் நகர், எண்ணூர், சென்னை, என்பவரை நேற்று முன்தினம் (20.10.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.3,000/-



மதிப்புள்ள துணிகள் மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி எதிரி அருண்குமார் என்பவர் வி-5 எண்ணூர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது 14 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட எதிரி அருண்குமார் என்பவர் விசாரணைக்குப் பின்னர், நேற்று முன்தினம் (20.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
அக்டோபர் 22, 2026

# முதல்-கார் வாங்குபவர்கள் இந்தியாவில் மதிப்பு வரிசையில் மேல்நோக்கி நகர்கின்றனர்: கோட்டக் ப்ரைம்

சென்னை 22, அக்டோபர் 2026: இளம் வாங்குபவர்கள் கார் சந்தைக்கு மிகச் சிறிய வயதிலேயே வருகிறார்கள், அதிக அளவில் செலவழிக்கிறார்கள், மேலும் நிதி வசதி, மறுவிற்பனை மீதான நம்பிக்கை மற்றும் பரந்த மாடல் தேர்வுகள் முதலாவது கார் பிரிவை மறுவடிவமைப்பு செய்வதால், சிறந்த வசதிகள் கொண்ட வாகனங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்

யங் இந்தியா முதலாவது கார் என்பதன் அர்த்தத்தையே மாற்றி வருகிறது. முந்தைய தலைமுறையினருக்கு, முதல் கார் என்பது பெரும்பாலும் பட்ஜெட்டுக்கு ஏற்ற, முக்கியமாக மலிவு விலையை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பயணத் தேவையாக மட்டுமே இருந்தது. ஆனால், இன்றைய பல இளம் வாங்குபவர்களுக்கு, இது மிகவும் யோசித்து எடுக்கப்படும் ஒரு வாழ்க்கை முறை மற்றும் மதிப்பு சார்ந்த தீர்மானமாக மாறியுள்ளது. இவர்கள் கார் சந்தைக்கு மிகச் சிறிய வயதிலேயே வருகிறார்கள், அதிக அளவில் செலவழிக்கிறார்கள், மேலும் முதல் நாளில் இருந்தே பல தேவைகளுக்குப் பயன்படக்கூடிய வாகனத்தை எதிர்பார்க்கிறார்கள்.

கோட்டக் மஹிந்த்ரா ப்ரைம் லிமிடெட். (கோட்டக் ப்ரைம்) நிறுவனத்தின் கூற்றுப்படி, தங்கள் 20களின் ஈடுப்பகுதியிலும் 30களின் தொடக்கத்திலும் உள்ள முதன்முறை கார் வாங்குபவர்கள், முந்தைய தலைமுறையினர் முதலீடு செய்ததை விட இப்போது தங்கள் முதல் வாகனத்திற்காக கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகமாக முதலீடு செய்கிறார்கள். ஒரு தசாப்தத்திற்கு முன்பு, ஒரு என்ட்ரி-லெவல் காருக்கான முதல் கார் வழக்கமாக ரூ.1.5 லட்சம் முதல் ரூ.2.5 லட்சம் வரையிலான வரம்பில் இருந்தது. இன்று, பல இளம் வாங்குபவர்கள் ரூ.5 லட்சம் முதல் ரூ.8 லட்சம் வரம்பில் தொடங்குகிறார்கள், மேலும் பலர் சிறந்த வசதிகள் கொண்ட மாடல்கள், காம்பாக்ட் எஸ்யூவி கள் அல்லது நடுத்தரப் பிரிவு கார்களுக்காக இன்னும் கூடுதலான தொகையைச் செலவிடுகிறார்கள். பாதுகாப்பு, சௌகரியம், தொழில்நுட்பம், சாலையில் அதன் கம்பீரம் மற்றும் நீண்டகாலப் பயன்பாடு குறித்த அதிக எதிர்பார்ப்புகளே இந்த மாற்றத்திற்கு முக்கியக் காரணமாகும்.

“முதலாவது கார் பிரிவு கணிசமாக வளர்ச்சி அடைந்துள்ளது, மேலும் இந்த மாற்றம் ஒட்டுமொத்த ஆட்டோ சந்தையையே மறுவடிவமைப்பு செய்து வருகிறது” என்று கோட்டக் மஹிந்த்ரா ப்ரைம் லிமிடெட். நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி சூரஜ் ராஜப்பன் கூறினார்.

“முதல் முறை கார் வாங்குபவர்களின் விவரங்களில் ஒரு தெளிவான மாற்றத்தை நாங்கள் காண்கிறோம். இளம் வாங்குபவர்கள் சந்தைக்கு மிக விரைவாக வருகிறார்கள், மேலும் அவர்களின் முதல் கார் என்பது வெறும் ஒரு வாகனத்தைச் சொந்தமாக்கிக் கொள்வது பற்றி மட்டும் அல்ல. அது தங்களுக்குச் சௌகரியமான இஎம்ஐ வரம்பிற்குள் பெறக்கூடிய சிறந்த மதிப்பைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றியதாகும். இவர்கள் சிறிய வயதிலேயே சந்தைக்குள் நுழைகிறார்கள், அதிகமாகச் செலவழிக்கிறார்கள், பெரிய மற்றும் சிறந்த வசதிகள் கொண்ட வாகனங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள், மேலும் தங்களின் ஆசையை மலிவு விலையோடு சீரமைக்க நிதியுதவியை சாமர்த்தியமாகப் பயன்படுத்துகிறார்கள்”

# செலிபிரிட்டி மாஸ்டர்செஃப் தமிழ் நிகழ்ச்சியில் கண்கலங்கிய நடிகை சமந்தா ரூத் பிரபு!



சென்னை 22, அக்டோபர் 2026: எண்டமோல் ஷைன் இந்தியா தயாரிப்பில் உருவாகியிருக்கும் மாஸ்டர் செஃப் தமிழ் நிகழ்ச்சியில், தனக்குப் பிரியமான உணவான துர்கா ஹோட்டலின் புகழ்பெற்ற தயிர் வடையின் சுவை மூலம் பள்ளிப் பருவத்தின் இனிய நினைவுகளை மீட்டெடுத்து சமந்தா ரூத் பிரபு கண் கலங்கியது பார்வையாளர்களை நெகிழச் செய்தது.

சில உணவுகளின் சுவை நம் பழைய நினைவுகளை மீட்டெடுக்கும். அப்படியொரு நெகிழ்ச்சியான தருணத்தைச் செலிபிரிட்டி மாஸ்டர்செஃப் தமிழ் நிகழ்ச்சியில் சமந்தா ரூத் பிரபு பகிர்ந்து கொண்டுள்ளார்.

பள்ளிக்காலத்தில் தனக்கு மிகப்பிடித்த உணவாக பல்லாவரத்தில் இருக்கும் துர்கா ஹோட்டல் தயிர் வடையை குறிப்பிடுகிறார் சமந்தா.

பள்ளிப் பருவத்திற்குத் திரும்பிச் செல்வதாகக் கண்களை மூடிக் கொண்டு கற்பனை செய்யுமாறும், அங்கிருந்து நேராகத் துர்கா ஹோட்டலுக்குச் செல்வதாக நினைத்துப் பார்க்குமாறும் சமந்தாவிடம் சொல்லப்படுகிறது

தன்னுடைய பள்ளிப் பருவத்தின் எளிமையான, இனிமையான நாட்களை மனக் கண்ணில் மீண்டும் காணும் சமந்தா, உணர்ச்சிவசப்பட்டுக் கண்கலங்குகிறார்.

இந்த நெகிழ்ச்சியான தருணம் உணவுக்கும் நினைவுகளுக்கும் இடையிலான ஆழமான பிணைப்பை எடுத்துக்காட்டுகிறது. ஒரு பழக்கமான சுவை, நாம் வாழ்ந்த இடத்தையும், கடந்து வந்த காலத்தையும், அந்த நினைவுகளைச் சிறப்பானதாக மாற்றிய மனிதர்களையும் மீண்டும் நம் கண்முன் கொண்டு வரும். சமையல் குறிப்புகள் மற்றும் உணவு தயாரிக்கும் நுட்பங்களைத் தாண்டி, உணவு என்பது நம் வாழ்க்கைக் கதைகளைத் தன்னுள் சுமந்து நிற்கும் நினைவுப் பெட்டகமாகும். வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு, அது நம்மை நெகிழ செய்கிறது.

எண்டமோல் ஷைன் இந்தியா தயாரிக்கும் செலிபிரிட்டி மாஸ்டர் செஃப் தமிழ் நிகழ்ச்சி, தமிழ் பொழுதுபோக்குத் துறையைச் சேர்ந்த பிரபலங்களை ஒன்றிணைத்து, அவர்களின் வழக்கமான பணிச்சூழலிலிருந்து விலகி சமையல் உலகில் புதிய சவால்களை எதிர்கொள்ளச் செய்கிறது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் பிரபலங்கள் பல்வேறு சமையல் போட்டிகளில் தங்களது படைப்பாற்றல், சமையல் திறன் மற்றும் நெருக்கடியான சூழலில் செயல்படும் திறனை வெளிப்படுத்துகின்றனர். அதே நேரத்தில், தமிழர் பண்பாட்டை எடுத்து சொல்லும் உணவுச் சுவைகளும் பாரம்பரியங்களும் இங்கு கொண்டாடப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியில் சமந்தா ரூத் பிரபு செலிபிரிட்டி நடுவராகப் பங்கேற்கிறார். அவருடன் சமையல் கலைஞர்கள் வெங்கடேஷ் பட், சாஷி செல்லையா மற்றும் ஸ்ரேயா அட்கா ஆகியோரும் நடுவர்களாக இடம்பெறுகின்றனர். ஆர்.ஜே. விஜய் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சி கடந்த அக்டோபர் 19ஆம் தேதி முதல் சோனி விழாவில் ஒளிபரப்பாகிறது. மேலும், சோனி லிவ் தளத்திலும் இந்நிகழ்ச்சியை பார்க்கலாம்.

# உம்மிடி எத்திராஜின் மறைவுக்கு பிரதமர் இரங்கல்



சென்னை 22, அக்டோபர் 2026: திரு உம்மிடி எத்திராஜின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு வழங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோலை வடிவமைத்ததற்காக திரு உம்மிடி எத்திராஜ் என்றும் நினைவுகூரப்படுவார் என்று அவர் கூறியுள்ளார்.

2023-ம் ஆண்டு புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அரசு அந்தச் செங்கோலுக்கு உரிய கௌரவத்தை அளித்த போது அவரை சந்தித்தது குறித்து நினைவுகூர்ந்தத் திரு மோடி, அவரது வாழ்க்கையும், கலைத்திறனும் இந்தியாவின் பெருமைமிக்க வளமான பாரம்பரியத்திற்கும், நாட்டின் வளர்ச்சிப் பயணத்திற்கும் இடையேயான போற்றத்தக்கத் தொடர்பை பிரதிபலிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அவரது குடும்பத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பகிர்ந்திருப்பதாவது:

"திரு உம்மிடி எத்திராஜ் அவர்களின் மறைவை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன். தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட ஒரு பாரம்பரியமிக்க குடும்பத்திலிருந்து வந்த இவர், முன்னாள் பிரதமர் நேருவுக்கு வழங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோலை வடிவமைத்தமைக்காக என்றும் நினைவுகூரப்படுவார். பல ஆண்டுகளுக்குப் பின்பு, 2023-ல், புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அந்த செங்கோலுக்கு உரிய கௌரவத்தை வழங்கி சிறப்பிக்கும் வாய்ப்பு எங்கள் அரசுக்கு கிடைத்தது. அப்போது திரு உம்மிடி எத்திராஜ் அவர்களை சந்தித்து, நமது நாட்டிற்கும் கலாச்சாரத்திற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக நன்றி தெரிவிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவரது வாழ்க்கையும், கலைத்திறனும், இந்தியாவின் பெருமைமிக்க வளமான பாரம்பரியத்திற்கும் நமது நாட்டின் வளர்ச்சிப் பயணத்திற்கும் இடையிலான போற்றத்தக்க தொடர்பை பிரதிபலிக்கின்றன. அவரது குடும்பத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓம் சாந்தி"




# ஜெய்சங்கர்-ரூபியோ சந்திப்பு; எரிசக்தி வர்த்தகத்தை விரிவுபடுத்த இந்தியாவுக்கு அமெரிக்கா அழைப்பு

சென்னை 22, அக்டோபர் 2026: வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பில் எரிசக்தி மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ அழைப்பு விடுத்துள்ளார். இந்தியா-அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியா 5 மாதங்களில் 2வது முறையாக இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். மும்பையில் நேற்று வந்திறங்கிய அவர், ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, அமெரிக்காவுடன் எரிசக்தி வர்த்தகத்தை இந்தியா விரிவுபடுத்த வேண்டுமென ரூபியோ வலியுறுத்தி உள்ளார். இது, இந்தியாவின் விநியோகச் சங்கிலிகளை பன்முகப்படுத்துவதில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் என ரூபியோ நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது குறித்து ஜெய்சங்கர் தனது சமூக ஊடக பதிவில், ‘‘வர்த்தகம், எரிசக்தி, தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் மக்கள் பரிமாற்றம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து நானும் ரூபியோவும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டோம்’’ என தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு துறை வெளியிட்ட அறிக்கையில், ‘‘மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் உட்பட, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்னைகள் குறித்து இரு அமைச்சரும் விவாதித்தனர். அமெரிக்காவுடனான எரிசக்தி வர்த்தகத்தை அதிகரிப்பது, இந்தியாவின் விநியோக சங்கிலிகளை பன்முகப்படுத்துவதிலும், அதன் கணிசமான நுகர்வோர் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சர் ரூபியோ வலியுறுத்தினார். இருதரப்பு பாதுகாப்பு மற்றும் சிவில் அணுசக்தி ஒத்துழைப்பில் சமீபத்திய முன்னேற்றங்களையும் அவர் பாராட்டினார்.’’ என கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, மும்பை தாஜ் ஓட்டலில் தாஜ் நினைவிடத்தை பார்வையிட்ட ரூபியோ, அங்கு 2008 மும்பை தீவிரவாத தாக்குதலில் பலியான 6 அமெரிக்கர்கள் உள்ளிட்டோருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மலர்வளையம் வைத்தார்.

இந்தியா-அமெரிக்கா ஒற்றுமையாக உள்ளன

மும்பையில் நேற்று நடந்த ப்ரீடம் 250 வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய ரூபியோ, ‘‘சில சமயங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும், இந்தியா-அமெரிக்கா இடையே இரு நாடுகளின் தேசிய நலனுக்கு முக்கியமான விவகாரங்களில் அசாதாரணமான ஒற்றுமை உள்ளது. அமெரிக்கா-இந்தியா இடையேயான உறவு 21ம் நூற்றாண்டு எப்படி அமையப் போகிறது என்பதை பல வழிகளில் நேர்மறையான கோணத்தில் வரையறுக்கும். இந்தோ-பசிபிக் பிராந்தியம் சுதந்திரமாகவும் அனைவருக்குமானதாகவும் இருக்க வேண்டும்’’ என்றார்.